## தேர்வாணையத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் அறிவுரைகள்:

எச்சரிக்கை:

1. விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் முன்னர் விண்ணப்பதில் உள்ள தகவல்களை மாற்றலாம். தவறாக விண்ணப்பித்திருந்தால் விண்ணப்பத்தினை நீக்கலாம்.

2. நிரந்தரப்பதிவில் தவறான தகவல்கள் இருப்பின் அதனை மாற்றிய பின்னர் விண்ணப்பிக்கவும். நிரந்தரப்பதிவில் அல்லது தேர்வுக்கான விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் அளித்திருந்தால் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவர்கள் தேர்வு எழுதுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்பட வாய்ப்புள்ளது.

3. விண்ணப்பத்தில் விவரங்களைப் பதிவு செய்து இறுதியாக சமர்ப்பித்த பின்னர், விண்ணப்பத்திலுள்ள விவரங்களை மாற்ற இயலாது. எனவே விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்து சமர்ப்பிக்கவும்.

4. விண்ணப்பத்தின் விவரங்களை மாற்றவும் நீக்கவும் வாய்ப்பு இருப்பதால் விண்ணப்பதாரர்கள் தங்களது பயனாளர் ஐடி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை மற்றவர்களிடம் பகிர வேண்டாம்.


5. விண்ணப்ப விவரங்களை மாற்றக்கோரி பெறப்படும் மின்னஞ்சல் மற்றும் கடிதங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

அறிவுரைகள்:

1. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க நிரந்தரப்பதிவு அவசியம். ஏற்கனவே நிரந்தரப்பதிவு செய்திருப்பவர்கள், www.tnpscexams.net அல்லது www.tnpscexams.in என்ற இணையப்பக்கத்தில் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் தெரிவு / பதவிக்கு எதிரே உள்ள “Apply Now” என்பதை கிளிக் செய்தவுடன் திரையில் தோன்றும் விண்ணப்பதாரர் உள்நுழைவுப் பக்கத்தில் (Candidate login Page) கோரப்படும் விவரங்களை உள்ளீடு செய்து விண்ணப்பத்திற்குள் நுழையவும்.




2. பின்னர் அத்தெரிவிற்கான கல்வித்தகுதி மற்றும் பதவி ஆகியவற்றை செலெக்ட் செய்து உள்நுழையவும்.




3. விண்ணப்பப்படிவம் 8 நிலைகளைக் கொண்டது. முதல் நிலையில் அந்த தெரிவு / தேர்வு தொடர்பான அறிவிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அப்பக்கத்தில் உள்ள அறிவிக்கை மற்றும்

விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் ஆகியவற்றுக்கான இணைப்புகளை கிளிக் செய்து அவற்றை கவனமாகப் படித்து புரிந்துகொள்ளவும்.

4. பின்னர் "இந்தத் தெரிவிற்கான அறிவிக்கை மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் ஆகியவற்றை நன்கு படித்து அறிந்துகொண்டேன். இந்த பதவிக்கு/தெரிவிற்கு நான் தகுதியான நபர் எனக் கருதுகிறேன். எனவே நான் இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புகிறேன். இப்பதவிக்கான விண்ணப்பத்தில் எனது விவரங்களை மிகுந்த கவனத்துடன் பதிவு செய்வேன். கவனக்குறைவு இல்லாமலும், தட்டச்சுப் பிழை இல்லாமலும், விண்ணப்பத்தின் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டியது எனது பொறுப்பாகும்" என்ற உறுதிமொழியினை அளித்த பின்னர் "Save & Continue" என்பதை கிளிக் செய்யவும்.

5. அடுத்த பக்கத்தில், நிரந்தரப்பதிவில் நீங்கள் பதிவு செய்துள்ள விவரங்கள் தோன்றும். அவை அனைத்தும் சரியாக இருந்தால் "மேலே உள்ள விவரங்கள் யாவும் சரியாக உள்ளன எனச் சான்றளிக்கிறேன். விண்ணப்பத்தினை சமர்ப்பித்தப் பின்னர், மேற்கூறிய விவரங்களை மாற்ற இயலாது என்பதை நான் அறிவேன்" என்பதை கிளிக் செய்து உறுதி அளித்த பின்னர் "Save & Continue" என்பதை கிளிக் செய்யவும்.

6. நிரந்தரப்பதிவு விவரங்கள் தவறாக இருப்பின் "EDIT OTR" என்பதை கிளிக் செய்து நிரந்தரப்பதிவில் தவறான விவரங்களை சரி செய்து சமர்ப்பித்த பின்னர், மீண்டும் விண்ணப்பிக்கவும்.

7. அடுத்த பக்கத்தில் தங்களது முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியன சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்யவும். இல்லையெனில் அதனை நிரந்தரப்பதிவிற்குச் சென்று மாற்றிக்கொள்ளவும்.

8. நீங்கள் நிரந்தரப்பதிவில் மாற்றம் செய்யும் விவரங்கள் தேர்வாணைய அலுவலர்களால் சரிபார்க்கப்படும். அதில் தவறான தகவல் மற்றும் சரியான சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்படாமல் இருப்பின் தங்களது கோரிக்கை நிராகரிக்கப்படுவதுடன், தவறான விவரங்கள் பதிவு செய்யப்பட்ட உங்களது தேர்வுக்கான விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

9. அடுத்த பக்கத்தில் உங்களது கல்வித்தகுதி குறித்த விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். அதில் SSLC முதல் முதுநிலை (PG Degree) வரை உங்களது கல்வித்தகுதி எதுவோ அவை அனைத்தையும் பதிவு

செய்யலாம். தட்டச்சு, சுருக்கெழுத்து குறித்த விவரங்களையும் மற்ற விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். அப்பக்கத்தில் நீங்கள் பதிவு செய்த விவரங்கள் சரியானவை என்பதை உறுதி செய்த பின்னர் "Save & Continue" என்பதை கிளிக் செய்து அடுத்த பக்கத்திற்குச் செல்லலாம்.

10. அடுத்து வரும் பக்கத்தில் ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளி, முன்னாள் இராணுவத்தினர் ஆகியோர் தங்களது விவரங்களை பதிவு செய்வதுடன் அவர்களின் பணி குறித்த விவரங்கள் மற்றும் ஏனைய விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். இப்பக்கத்தில் நீங்கள் பதிவு செய்துள்ள விவரங்கள் சரியெனில் அதனை உறுதி செய்து "Save & Continue" என்பதை கிளிக் செய்து அடுத்த பக்கத்திற்குச் செல்லலாம்.

11. அடுத்த பக்கத்தில் தேர்வு மையம் மற்றும் தேர்வுக்கான பாடங்களை தெரிவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

12. பின்னர் நீங்கள் விண்ணப்பத்தில் பதிவு செய்த விவரங்கள் அனைத்தும் முற்காட்சி (Preview) பக்கத்தில் தோன்றும். அதனை உறுதி செய்தவுடன் இந்த தெரிவுக்கான மிக முக்கிய தகவல்கள் தோன்றும். இந்த நிலை வரை நீங்கள் உங்களது விண்ணப்பத்தின் விவரங்களை மாற்றிக்கொள்ளலாம். விண்ணப்பதினையே நீக்கிக் (DELETE) கொள்ளலாம். இவ்விவரங்களை உறுதி செய்து இறுதியாக உங்களது விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர் நீங்கள் உங்களது விண்ணப்பத்தில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. மாற்றம் செய்ய கோரி பெறப்படும் மின்னஞ்சல், கடிதம், மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர் எனில் உரிய விண்ணப்பக்கட்டணத்தை செலுத்த வேண்டும்.

13. நீங்கள் உங்களது விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பித்த பின்னரே உங்களுக்கான விண்ணப்ப எண் வழங்கப்படும்.

14. உங்களது விண்ணப்பம் சரியான முறையில் சமர்ப்பிக்கப்பட்டு விண்ணப்ப எண் வழங்கப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பதாரர்கள் தங்களது நிரந்தரப்பதிவிற்குச் சென்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

15. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு விண்ணப்பதாரர்கள் எந்த விவரங்களையும் மாற்ற இயலாது என்பதால் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

16. விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்காமல் இடையிலேயே விட்டுச்செல்லும் விண்ணப்பங்கள் நிறைவான விண்ணப்பங்களாக கருதப்பட மாட்டாது. அவர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.